# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2214/56 - 2021 පෙබරවාරි මස 11 වැනි බ්‍රහස්පතින්දා - 2021.02.11

*2214/56 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டம்**

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4 ஆவது பிரிவின் (1) ஆவது உப பிரிவு மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவின் கீழ் நிதி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய என்னால் ஒழுங்குபடுத்தப்பட்டு விதிக்கப்படுகின்ற விதிமுறைகள் ஆகும்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி அமைச்சர்.*

*நிதி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2021, பெப்புருவரி 11.*

ஒழுங்குவிதிகள்

*1. இவ்வொழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் என அழைக்கப்படுகின்றன.*

*2. 2213/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட, 2021 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்கம் கொண்ட “இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்” இத்தால் நீக்கப்படுகிறது. இதன் மூலம் 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதிய 2184/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட “2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்” மற்றும் 2017 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 2044/40 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட “சிறப்பு இறக்குமதி*

உரிமம் சார்ந்த ஒழுங்குவிதிகள் என்பன 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி 02 ஆந் திகதிய 2213/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட "2021 ஆம் ஆண்டின் 02 ஆம் "இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாடு) விதிமுறைகள்" செய்யப்பட்ட திருத்தங்களின் எந்த விளைவும் இல்லாமல் விதிகள் நடைமுறையில் உள்ளன.

3. இவ் வர்த்தமானி பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள 4,5,6,7 மற்றும் 8 ஆம் இலக்க ஒழுங்குவிதிகள் 2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி அல்லது அதற்கு பிந்திய திகதியிடப்பட்ட கப்பல் சான்றிதழில்/ விமான சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களுக்கான இறக்குமதிகளுக்கு மாத்திரமே செல்லுப்படியாகும்.

4. அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட பீங்கான் பொருட்களின் இறக்குமதி, (69.10 மற்றும் 69.06 ஒருங்கிணைந்த வகைப்படுத்தல் குறியீட்டு தலைப்பின் கீழ் வருகின்ற அனைத்துப் பொருட்களும்) பொருட்கள் கப்பலேற்றப்பட்ட திகதி முதல் வெளிநாட்டு வழங்குனர்களிடமிருந்து குறைந்தபட்சம் 180 நாள் கடன் வசதி அல்லது வேறு ஏதேனும் வெளிநாட்டு அடிப்படையிலான கடன் வசதியின் கீழ் மட்டுமே இறக்குமதி செய்யப்படும்.

5. 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதிய 2184/21 இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) விதிமுறைகளில் அட்டவணை I இல் விவரிக்கப்பட்டுள்ள பீங்கான் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உள்ளீடுகள் நீக்கப்பட்டு, அத்தகைய பீங்கான் பொருட்கள் கூறப்பட்ட அதி விசேட வர்த்தமானியின் அட்டவணை II இல் சேர்க்கப்பட்டுவதன் மூலம் திருத்தப்படுகிறது.

| | *நிரல் I*<br>இ. மு.<br>தலைப்பு | *நிரல் II*<br>இ. மு.<br>குறியீடு | | *நிரல் III*<br>விபரம் | *நிரல் IV*<br>கடன் அடிப்படை<br>**(C)**<br>90 நாட்கள் | <br><br><br><br>180 நாட்கள் |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| **250** | **69.06** | 6906.00.00 | | **நீள் குழாய்கள், கழிவுக் குழாய்களும் குழாய்ப் பொருத்திகளும்** | | C |
| | | | | | | |
| **251** | **69.10** | | | **மட்பாண்டத்தொட்டிகள், கழுவும் சிறு தொட்டிகள், கழுவும் சிறு தொட்டிகளின் மிதிப்புகள், குளியல் தொட்டிகள், பிடெற்றுகள், தண்ணீர் கக்கஸ் தட்டுகள், நீர் அடிக்கும் சிற்றேன்ஸ்கள், சிறுநீர் கழிக்கும் பாத்திரங்களும் அவையொத்த சுகாதாரப் பாவனைக்கான இணைப்புகள்** | | |
| | | 6910.10.00 | - | வெண்களி மண்ணால் அல்லது சீனகளியால் ஆனவை | | |
| | | 6910.10.10 | --- | குந்தியிருந்து மலங்கழிக்கும் பாத்திரம் | | C |
| | | 6910.10.90 | --- | பிற | | C |
| | | 6910.90.00 | - | பிற : | | |
| | | 6910.90.10 | --- | குந்தியிருந்து மலங்கழிக்கும் பாத்திரம் | | C |
| | | 6910.90.90 | --- | பிற | | C |
| | | | | | | |

6. பின்வரும் பொருட்கள் 2020, யூலை மாதம் 16 ஆந் திகதிய 2184/21 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2020 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) விதிமுறைகளில் அட்டவணை I சேர்க்கப்பட்டுவதன் மூலம் திருத்தப்படுகிறது.

| | நிரல் I<br>இ. மு.<br>தலைப்பு | நிரல் II<br>இ. மு.<br>குறியீடு | | நிரல் III<br><br>விபரம் | நிரல் IV<br>தற்காலிக<br>இடைநிறுத்தம்<br>**(TS)** |
|---|---|---|---|---|---|
| **138** | **69.14** | | | **மண்ணாலான பொருட்கள்** | |
| | | 6914.90.00 | - | பிற : | |
| | | 6914.90.10 | --- | கைவினைப் பொருட்கள் | **TS** |
| | | 6914.90.90 | --- | பிற | **TS** |
| | | | | | |

7. 2017ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதிய 2044/40 இலக்க, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட சிறப்பு இறக்குமதி உரிமம் விதிமுறைகளில் அட்டவணை I இல் விவரிக்கப்பட்டுள்ள பின்வரும் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உள்ளீடுகள் நீக்கப்படுவதன் மூலம் மேலும் திருத்தப்படுகிறது.

| | நிரல் I<br>இ. மு.<br>தலைப்பு | நிரல் II<br>இ. மு.<br>குறியீடு | | நிரல் III<br><br>விபரம் | நிரல் IV<br>இறக்குமதி<br>கட்டுப்பாட்டு<br>உரிமம்<br>**(TS)** |
|---|---|---|---|---|---|
| **242** | **62.11** | | | **விளையாட்டு (பந்தய) சூட்டுகள், ஸ்கீ சூட்டுகள் (பனிக்கான), நீச்சல் உடைகள், பிற ஆடைகள்** | |
| | | 6211.42.92 | ---- | சாரி, பிற | L |
| | | 6211.43.92 | ---- | சாரி, பிற | L |
| | | 6211.49.92 | ---- | சாரி, பிற | L |

8. பின்வரும் பொருட்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய உள்ளீடுகள், 2020 ஆம் ஆண்டு யூலை மாதம் 16 ஆந் திகதிய 2184/21 ஆம் இலக்க, அதி விசேட வர்த்தமானியின் அட்டவணை II இல் சேர்க்கப்படுவதன் மூலம் திருத்தப்படுகிறது.

| | நிரல் I<br>இ. மு.<br>தலைப்பு | நிரல் II<br>இ. மு.<br>குறியீடு | | நிரல் III<br><br>விபரம் | நிரல் IV<br>கடன் அடிப்படை<br>*(C)* | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 90 நாட்கள் | 180 நாட்கள் |
| **252** | **62.11** | | | **விளையாட்டு (பந்தய) சூட்டுகள், ஸ்கீ சூட்டுகள் (பனிக்கான), நீச்சல் உடைகள், பிற ஆடைகள்** | | |
| | | 6211.42.92 | ---- | சாரி, பிற | **C** | |
| | | 6211.43.92 | ---- | சாரி, பிற | **C** | |
| | | 6211.49.92 | ---- | சாரி, பிற | **C** | |
| | | | | | | |

03-16